# VG BUSINESS MAGAZINE

FOR INTERNAL CIRCULATION ONLY

OCTOBER - 2021



வேட்டுவக்கவுண்டர் என்பது நமது பெருமை

மாதம்
October – 2021

இதழ்
4

ஆசிரியர்
கவிதா வாழைபரமேஸ்வரன்

இணை ஆசிரியர்
Dr.வாழைபரமேஸ்வரன்

வடிவமைப்பு
கவிதா வாழைபரமேஸ்வரன்

MOBILE
90037 95243

EMAIL
vgbusinesstycoons@gmail.com

WEBSITE
vgtycoons.com

For Internal Circulation Only

பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களின் சொந்த கருத்துகளே...

# முகப்புரை

வேட்டுவக்கவுண்டர்களின் வணிகத்தை மேம்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்தி நமது சமுதாய மக்களை நல்ல நிலையை அடையச் செய்வதே வேட்டுவக்கவுண்டர் வணிக மேம்பாட்டு அமைப்பின் (VG BUSINESS TYCOONS) நோக்கம். ஒரு சமுதாயம் நல்ல நிலையை அடைய வேண்டுமென்றால் அந்த சமுதாயம் கல்வி, கலாச்சாரம், வணிகம், பொருளாதாரம் போன்றவற்றில் மேம்பட்டிருக்க வேண்டும். இதற்கு மிகவும் உறுதுணையாகவும், வழிகாட்டியாகவும் இருப்பவர்கள் ஆசிரியர்கள், பேராசிரியர்கள் மற்றும் வணிக மேம்பாட்டு பயிற்சியாளர்கள் ஆவார்கள். அத்தகைய பெருமை மிக்க கல்வியாளர்களை போற்றுவதில் VG BUSINESS TYCOONS பெருமை கொள்கிறது.

நாம் ஒவ்வொருவரும் வாழ்வில் முன்னேற நேர்மையான வணிகம் செய்வோம்... பயிற்சி பெறுவோம்... நுட்பம் கற்போம்... மேம்படுவோம்... முன்னேறுவோம்...



கவிதா வாழைபரமேஸ்வரன்




நேர்த்தியான எளிய நடை... தேர்ந்த பத்திரிக்கையாளரை போல உள்ளது. கவிதா அக்காவின் மேல் உள்ள பிரமிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எங்கே இருந்து கிடைக்கிறது இந்த சக்தி...?

**--- திரு. சுந்தர்ராஜ்**
**தரணி ஹெர்பல்ஸ்**

Really proud of my family.... Thank you kavitha sister

**--- மைதிலி சரவணன்**
**SARAL MOTORS**

தலையூர் காளி கோவில் பற்றிய கட்டுரை சிறப்பு. சுதந்திர தியாகி ராமசாமி கவுண்டர் அவர்களின் வாழ்க்கை வரலாறு நம்மை பெருமைகொள்ள வைக்கிறது. இவர்கள் போன்ற பெருமை மிக்கவர்கள் வரலாறு நம்மில் பலருக்கு தெரியாது. அதை நம் மக்களுக்கு கொண்டு சேர்த்தது பாராட்டுக்குரிய செயல். கரூர் பெரியவர் பற்றிய கட்டுரை இளைஞர்களுக்கு உத்வேகம் தரக்கூடியது. மனமார்ந்த பாராட்டுக்கள்...

**--- A.சக்திவேல்**
**மரப்பம்பாளையம் புதூர்**

வாழ்த்துக்கள் அடுத்த இதழை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்...

**--- கமலவேணி சிவ இளங்கோ**
**INSURANCE FACTORY**

# டாக்டர். இராதாகிருஷ்ணன் (நல்லாசிரியர்) விருது பெற்ற கண்மணி டீச்சர்



ஆசிரியப்பணியே அறப்பணி அதற்கே உன்னை அற்பணி என்ற சொல்லுக்கேற்ப அரசு பள்ளி மாணவர்களுக்கு கல்விப்பணியை சிறப்பாக ஆற்றி வருபவர் திருமதி. த.கண்மணி B.lit, B.Ed, B.Sc. இவர் மாணவர்களிடமும் பொதுமக்களிடமும் நன் மதிப்பைப் பெற்றவர். ஒவ்வொரு மாணவர்களின் பிறந்த நாள் அன்றும் மரக்கன்றுகள் மற்றும் புத்தகங்களை பரிசாக வழங்கி ஊக்குவிக்கிறார். பள்ளிப் பாதுகாப்பு இயக்கத்துடன் இணைந்து அரசுப் பள்ளிகளை மீட்டெடுக்கும் நிகழ்வுகளிலும் பங்காற்றி வருகிறார். முதன் முறையாக தாந்தோணி ஒன்றியத்தில் அரசு பள்ளியில் மாடித்தோட்டம் அமைத்து காய்கறி மற்றும் மூலிகைத் தோட்டத்தை உருவாக்கி மாணவர்களுக்கு இயற்கை விவசாயத்தை கற்றுக் கொடுக்கிறார். தான் பணியாற்றும் பள்ளியில்

நடைபெறும் ஒவ்வொரு விழாவிற்கும் தேவையான செலவுகளை தானே ஏற்று போட்டிகள் வைத்து மாணவர்களுக்கு பரிசுகளும் வழங்கி வருகிறார். மாணவர்களுக்கு வங்கிக் கணக்குகள் ஆரம்பித்துக் கொடுத்து சேமிக்கும் பழக்கத்தை தொடர்ந்து செய்ய வழி வகுத்துள்ளார். இவருக்கு கடந்த செப்டம்பர் 5 ஆசிரியர் தினத்தன்று டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது கிடைத்துள்ளது. இவர் கரூர் பசுபதி பாளையத்தை சேர்ந்தவர். இவரது கணவரின் பெயர் திரு.மு.நடராஜன். கரு அண்ட வேட்டுவக்கவுண்டர் குலத்தை சேர்ந்த இவர்களுக்கு வசி என்கிற மகனும் மனிஷா என்கிற மகளும் உள்ளனர். இருவரும் BE முடித்துள்ளனர். மகளுக்கு திருமணமாகிவிட்டது. மகனுக்கு பெண் பார்த்து வருகிறார்.




"இன்றைய காலகட்டத்தில் தனியார் பள்ளிகளின் எண்ணிக்கை அதிகமாகி வருவதற்குக் காரணம். அதன் உட்கட்டமைப்பு வசதிகளும், பாடம் தவிர்த்துக் கற்பிக்கப்படும் கூடுதல் திறன் பயிற்சிகளும் தான். இதை அரசுப் பள்ளிகளிலேயே இலவசமாக அளித்தால் மக்கள் ஏன் தனியாரை நாடப் போகிறார்கள் என்று யோசித்து அவற்றைச் செயல்படுத்தினேன்" என்கிறார் நல்லாசிரியர் விருது பெற்ற கண்மணி டீச்சர்.

படிக்கும் காலத்திலேயே சொல்லிக் கொடுப்பது பிடிக்கும் என்பதால், ஆசிரியர் பணியில் சேர்ந்தேன். அரசு வேலை கிடைக்கும் வரை தனியார் பள்ளியில் பணி புரிந்தேன். பணி கிடைத்து அரசுப் பள்ளிக்குச் சென்றபோது மகிழ்ச்சியை விட என்னை அதிகம் ஆட்கொண்டது பேரதிர்ச்சி. காரணம் நான் பார்த்த அரசுப் பள்ளியின் மோசமான உட்கட்டமைப்பு நிலை மற்றும் சுகாதாரம்.

## சாலப்பட்டி ஆரம்பப்பள்ளி

22 வருடங்களுக்கு முன் 1995-ல் கரூர் அருகே சாலப்பட்டி என்ற கிராமத்தின் ஆரம்பப்பள்ளியில் என் பயணத்தைத் தொடங்கினேன். தனியார் பள்ளியில் 300 ரூபாய் சம்பளத்துக்கு வேலை பார்க்கும் போது கொடுத்த உழைப்பை விட இப்பள்ளிக்கு அதிகம் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்தேன். இன்ஃபோசிஸ் நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு 3 கணினிகளைப் பெற்றோம். ரோட்டரி மற்றும் ஸ்பான்சர்கள் மூலம் பள்ளிக்கு சுற்றுச்சுவர், சிமெண்ட் தரை அமைத்தோம். அடிப்படைத் தேவைக்கு கழிப்பறை கட்டப்பட்டது. அறிவுத் தேவைக்கு கணினி அறை உருவாக்கப்பட்டது. 2009-ல் ஆண்டாங்கோவில் புதூர் என்னும் ஊருக்கு மாற்றலானது.

## தனியார் பள்ளியை மிஞ்சிய அரசுப் பள்ளி

ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, ஆண்டாங்கோவில் புதூர், தாந்தோணி ஒன்றியம், கரூர். "இந்தப் பள்ளிக்கு 2009 - ம் ஆண்டு பணியிட மாறுதலில் தலைமை ஆசிரியையாகப்

பொறுப்பேற்றபோது, போதிய அடிப்படை வசதிகள் இல்லாமல் இருந்தது. மழை பெய்தால் வகுப்பறைக்குள் நீர் ஒழுகும். தரை குண்டும் குழியுமாக இருக்கும். கணினி, நூலகம் போன்ற கல்வி வெளிச்சங்கள் என பலவும் இங்கே இல்லை. அதே சமயம், மாணவர்களின் திறமைக்கும் குறைவில்லை. “எம்புள்ள நல்ல படிக்கிறானா” என்று கேட்கும் ஏழைப் பெற்றோருக்கு பதில் சொல்லும் பொறுப்பையும் நான் உணர்ந்தேன். தனியார் பள்ளிகளுக்கு இணையான வகையில் தரமான கல்வியை அளிக்க வேண்டும் என்று நான் உறுதியேற்றேன். அதன் முதல்படியாக, KVB யில் நன்கொடை பெற்று இரண்டு வகுப்பறைகளுக்கு டைல்ஸ் ஒட்டினோம். அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டது. பள்ளிக்கென குறைவான இடமே இருந்ததால் மாடிக்கட்டிடத்துக்கு அனுமதி பெற்றோம்.ஓட்டு கட்டிடத்தை இடித்து மாடி கட்டிடம் கட்டினோம். பள்ளியில் மாணவர்கள் திறந்த வெளியில் கழிவறைக்குச் சென்று கொண்டிருந்தனர். மாணவிகளின் நிலையை யோசித்துப் பழைய சத்துணவு அறையைப் பெண்கள் கழிப்பறையாக மாற்றினோம். அதற்கு 50 ஆயிரம் ரூபாய் செலவானது. 32 ஆயிரத்தை அரசு அளிக்க 8 ஆயிரத்தைத் தன்னார்வலர்கள் தந்து உதவினர். மீதி 10 ஆயிரத்தை நானே கொடுத்து விட்டேன்.






சிமெண்ட் ஆஸ்பெஸ்டாஸ் கூரைகளை தன்னார்வலர்கள் மூலம் பெற்று, 200 பேர் அமரும் வகையிலான அப்துல் கலாம் நினைவரங்கம் அமைக்கப்பட்டது. அதில் காலை வழிபாடு, முக்கிய சந்திப்புகள், உணவருந்துவதைச் செய்து வருகிறோம். சுற்று வட்டார மாவட்டத்தில், எந்த ஒரு அரசுப் பள்ளியிலும் இது போன்ற ஆடிடோரியம் இல்லை. உள்கட்டமைப்பு வசதிகளோடு மாணவர்களின் திறன்களை வளர்க்கும் பயிற்சிகளையும் அளிக்க முடிவு செய்தோம். செஸ், கராத்தே, சிலம்பம், அபாகஸ், கணினி, தியானம் மற்றும் இந்தி வகுப்புகள் தொடங்கப்பட்டன. கராத்தே மற்றும் கணினி வகுப்புகளுக்காக எனது ஊதியத்திலிருந்து மாதா மாதம் ரூ.2,500 பள்ளிக்கு அளித்து விடுகிறேன். சமுதாய பங்களிப்பாக ரூ 1,67,000 பெற்று நமக்கு நாமே திட்டம் மூலம் PRIMARY IDEA LAB கட்டப்பட்டு வருகிறது. தமிழகத்தில் முதல் முறையாக தொடக்கப் பள்ளியில் அறிவியல் ஆய்வகம் துவங்கப்பட உள்ளது. நாம் கேட்டால் செய்வதற்கு நிறையப்பேர் இருக்கின்றனர். ஆனால் நாம் தான் உரிய முறையில் கேட்கப் பழக வேண்டும். பள்ளியில் மைதானம் இல்லாததால் மாணவர்கள் விளையாடுவதில் சுணக்கம் ஏற்பட்டது. அருகில் இருந்த தனியார் கல்யாண மண்டப உரிமையாளரை அணுகி விவரத்தைச் சொன்னேன். நிகழ்ச்சிகள்

இல்லாத நாட்களில் கார் பார்க்கிங்கைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி அளித்தார். ஒவ்வொரு வாரமும் வியாழனன்று அங்கு சென்று விளையாடுவோம். பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டம், கிராமக் கல்விக்குழுக் கூட்டம், பள்ளி மேலாண்மை குழு கூட்டம் மாதம் ஒரு முறை நடத்தி பள்ளி வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்கள் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகிறது. தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மூலம் துளிர் இல்லம் ஏற்படுத்தி மாணவர்களுக்கு வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி உள்ளோம். சுமார் 1500 புத்தகங்கள் மேல் நன்கொடையாகப் பெற்று ‘வாசிப்பை நேசிப்போம்’ என்ற நிகழ்ச்சியை நடத்தி வருகிறோம். மேலும் கலை நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டு போட்டிகளில் பங்கு பெற செய்தும், உலகச்சாதனை நிகழ்வுகளிலும் மாணவர்களை பங்கேற்க செய்தும் சான்றிதழ்களை பெற்று வழங்கப்படுகிறது.






அத்தனையையும் பார்த்துப் பார்த்துச் செய்தாலும் தனியார் பள்ளி மோகம் மட்டும் குறைவதே இல்லை. அதைப் போக்கவே தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கிறேன். அரசின் நலத்திட்டங்களை சரியான நேரத்தில் சரியான முறையில் பயன்படுத்தி உள்ளேன். ஏழை எளிய மாணவ மாணவிகளுக்கு என்னால் முடிந்த அத்தனை உதவிகளையும் செய்து வருகிறேன்.

பாடத்தை புரிய வைப்பவர் ஆசிரியர், கேள்விகளை கேட்கத் தூண்டுபவர் சிறந்த ஆசிரியர். கடமையே எனப் பணிபுரியாமல் கனிவோடு பணியாற்றினாலே அரசுப் பள்ளிகளின் தரம் தானாய் உயரும் என்பது என் கருத்து" என்கிறார் மாணவர்களின் கண்ணின் மணியாய் விளங்கும் நல்லாசிரியர் விருது பெற்ற கண்மணி டீச்சர்.





# கல்விதந்தை கே. வி. கே. காளியப்பகவுண்டர்

எளிமை, தூய்மை, நேர்மை, சத்தியம் ஆகிய பண்புகளுடைய மனிதர்களே வையத்தில் வாழ்வாங்கு வாழ இயலும். அவ்வழியே தன்னலமற்ற தியாகத்தாலும், அறவழியைப் பின்பற்றியும் எளிமையாகத் தொண்டாற்றியும் மக்கள் உள்ளத்தில் நீங்கா இடம் பெற்றவர் கோப்பம்பாளையம் திரு. கே. வி. காளியப்ப கவுண்டர் . இந்தியாவின் முன்னேற்றம் என்பது கிராமங்களின் முன்னேற்றத்தில் அடங்கி உள்ளது என்கிற காந்தியடிகளின் கருத்தை ஏற்று, அவரோடு இணைந்து நாட்டு விடுதலைக்காக உழைத்தும், சுதந்திரம் பெற்ற பின்னர் கல்விப் பணியில் தன்னுடைய முயற்சியையும், செல்வத்தையும் ஈந்து நீங்காத புகழைத் தேடிக் கொண்டவர் திரு. கே.வி.கே. ஐயா ஆவார். அவரது வாழ்க்கை சிறப்புக்களை நினைவு கூர்வது, இளைஞர்களுக்கு எழுச்சியையும், ஊக்கத்தையும், வழிகாட்டுதல்களையும் நல்கும் என்று கருதுகிறோம்.

## தோற்றம்

கே.வி.கே ஐயா என்று மக்களால் அன்புடன் அழைக்கப்பட்ட தியாகச் செம்மல் திரு.கே.வி. காளிப்பகவுண்டர் அவர்கள் ஈரோடு மாவட்டம் புஞ்சைப் புளியம்பட்டிக்கு அருகிலுள்ள காவிலிபாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட கோப்பம்பாளையம் என்னும் ஊரில் 1910-ஆம் ஆண்டு ஜனவரி 25 ம் நாள் திரு. வெங்கடாசலக்கவுண்டர் மற்றும் திருமதி.தாயம்மாள் அவர்களுக்கு மகனாக பிறந்தார். இப்பகுதி மக்கள் அன்புடன் இவரை கோப்பம்பாளையம் தம்பிக்கவுண்டர் என்றும் அழைப்பார்கள். இவர் பூலுவ வேட்டுவக்கவுண்டர் குலத்தை சேர்ந்தவர். இவர்களது குல தெய்வம் கெஞ்சனூர் அம்மன் கோவில் ஆகும்.

## இந்திய சுதந்திரப் போராட்ட தியாகி

இவர் இளமைப்பருவம் முதலே இந்திய தேச விடுதலைக்காகவும், ஆங்கிலேயரை விரட்டியடிக்க வேண்டும் என்கிற எண்ணத்தை முழு மூச்சாகக் கொண்டும் அருகிலுள்ள கிராம மக்களை ஒன்று திரட்டி விடுதலையின் முக்கியத்துவம் பற்றியும் நாடு பயன்பெறும் விதம் பற்றியும் எடுத்துரைத்தார். நாடு விடுதலையடைந்த பின் இவர் இந்திய விடுதலைப் போராட்ட தியாகியாக கவுரவிக்கப்பட்டார்.





## பவானிசாகர் அணை

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு கட்டப்பட்ட முதல் அணை பவானிசாகர் அணை. இந்த அணை கட்டும் பணி 1948ல் துவங்கி 1955ல் நிறைவு பெற்று 1956 ல் நீர் பாசனத்திற்காக திறக்கப்பட்டது. அந்த காலகட்டத்தில் அய்யா அவர்கள் ஜில்லா போர்டு மெம்பர் (மாவட்ட வளர்ச்சி குழு உறுப்பினர்) ஆக இருந்தார். பவானி நதி நீரைத் தேக்குவதின் மூலம் 2.0 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெரும் என்ற தனது ஆலோசனையை திரு.கே.வி. காளிப்ப கவுண்டர் அய்யா அவர்கள் முன்நிறுத்தினார் கி.பி 1947 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த ஓ. பி. ராமசாமி ரெட்டியார் ஆட்சிக்காலத்தில் கீழ்பவானி திட்டக்குழு உருவாக்கப்பட்டது. இக்குழுவில் கே.வி.கே ஐயா முதன்மை பங்காற்றினார். சிறுமுகை வழியாக நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் மோயாறு கலக்கும் இடத்தில் பவானி சாகர் அணைக் கட்டானது கீழ்பவானி திட்டம் மூலம் கட்டப்பட்டுள்ளது. கே.வி.கே ஐயா மற்றும் திட்ட

குழு உறுப்பினர்கள் இணைந்து வடவள்ளி, பீர்க்கடவு, குய்யனூர், பட்டரமங்கலம் ஆகிய கிராம மக்களை சந்தித்து அணைக்கட்டின் அவசியத்தையும் அதன் மூலம் கிடைக்கும் பயன்களையும் மக்களிடத்தில் எடுத்துரைத்து அனைவரையும் சம்மதிக்க வைத்து அவ்விடத்தில் பவானிசாகர் அணைக்கட்டு அமைய வழிவகுத்தார். அணை திறப்பு விழாவில் நேரு கலந்து கொண்டார். லட்சக்கணக்கான ஏக்கர் பாசனம் பெற, ஈரோடு நகரம் உட்பட பல ஊர்களில் குடிநீர் கிடைக்க உத்தமர் கே. வி. கே ஐயா அவர்கள் வழி ஏற்படுத்தி கொடுத்தார்.



## கல்வி தந்தை

நாடு விடுதலைக்குப் பின் காமராசரின் அன்புத் தொண்டராகக் கல்விப் பணியைக் கிராம மக்களுக்கு அளிப்பதில் தீவிரம் காட்டி நிலக்கொடை மற்றும் பொருட்கொடை வழங்கித் தொடக்கக் கல்வி மற்றும் உயர்நிலைக் கல்வி வளர்ச்சிக்கு அடிகோலினார். இவர் தனது சொத்துக்களை கல்விச் சேவைக்காக கொடையளித்து உள்ளார். அதுமட்டுமின்றி தனது சேமிப்பு தொகையையும் பள்ளி கட்டிடம் கட்ட செலவழித்தார். பள்ளிக்கூடம் இல்லாத ஊர்களில் ஓராசிரியர் பள்ளிகளை நிறுவினார். இதனால் இவர் கல்விதந்தை கே.வி.காளிப்பகவுண்டர் ஐயா என்று எல்லாரும் அன்புடன் அழைக்கப்படுவார்.



இதனால் அரசு பள்ளிக்கு கே வி கே ஐயாவின் பெயரையே வைத்து பள்ளியில் கே.வி. காளிப்பகவுண்டர் ஐயாவுக்கு சிலையமைத்து மணிமண்டபம் அமைத்துள்ளனர்.

## பொதுப்பதவிகள்

கே.வி.காளிப்பகவுண்டர் ஐயா பல்வேறு பொதுப்பணி பதவிகளை வகித்து மக்களுக்கு நற்பணிகளை செய்துவந்தார். அவைகள் பின்வருமாறு :

- கோபி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தலைவர் 1944 - 1960
- கோபி நில வள வங்கி இயக்குனர் 1946 - 1961
- மாவட்ட வளர்ச்சிக்குழு உறுப்பினர் 1947 - 1961
- கே . வி . கே . அ ர சு மே ல் நி லை ப் ப ள் ளி கட்டடக் குழுத் தலைவர் 1953 - 1970
- நம்பியூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் மற்றும் காவிலி பாளையம் ஊராட்சித் தலைவர் 1961 - 1970

## நன்கொடைகள்

- கே.வி.கே. அரசு மேல்நிலைப்பள்ளிக்கு இடம் : 4.32 ஏக்கர்.
- கே.வி.கே. அரசு மேல்நிலைப்பள்ளிக்குக் கட்டிடம் கட்ட : ரூ. 2.5 இலட்சம்.

- காவிலிபாளையம் அரசு உயர்நிலை பள்ளிக்கு இடம் : 4.50 ஏக்கர்.
- காவிலிபாளையம் அரசு உயர்நிலை பள்ளிக்கு கட்டிடம் கட்ட : ஒரு இலட்சம்.
- கோப்பம்பாளையம் தொடக்கப்பள்ளிக்கு இடம் : 40 சென்ட்.
- அரிஜன் காலனி அமைக்க இடம் : 1 ஏக்கர் நிலம் கொடுத்து உள்ளார்.

அவர் தானமாக கொடுத்த சொத்தின் இன்றைய மதிப்பு 100 கோடிக்கு மேல்.

## மறைவு

பூமிதான இயக்க தலைவர் வினோபாஜியை தன் வீட்டிற்கே வரவழைத்து தன் சொத்துக்களை தானமாக வழங்கிய கொடை வள்ளல், கொங்கு நாட்டுக் காந்தி மற்றும் காமராசரின் அன்புத் தம்பி என அனைவராலும் போற்றி வணங்கப்பட்ட ஐயா 16-08-1970 அன்று இயற்கை எய்தினார்.

## நினைவு நாள்

அய்யாவின் சிறப்பை போற்றும் வகையில் கடந்த 16.08.21 அய்யாவின் நினைவு நாளில் புஞ்சை புளியம்பட்டி கே.வி.கே பள்ளி வளாகத்தில் உள்ள அய்யாவின் திரு உருவ சிலைக்கு மத்திய இணை அமைச்சர் திரு.முருகன்





அவர்களும், பாஜக மாநில தலைவர் திரு.அண்ணாமலை Ex. IPS அவர்களும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். இதற்கான ஏற்பாடுகளை மத்திய அரசின் ரயில் உபயோகிப்பாளர் ஆலோசனை குழு உறுப்பினரும் பாஜக மாவட்ட பொதுச் செயலாளருமான நமது சொந்தம் S.M செந்தில்குமார் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். அய்யாவின் பேரன் திரு.செந்தில் அவர்களும், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் திரு.பழனிச்சாமி மற்றும் உறுப்பினர்கள், நமது சமுதாய தலைவர்கள், ஊர் பெரியவர்கள் அவர்களை வரவேற்று நமது சமுதாயம் சார்பில் நன்றி தெரிவித்தனர்.

## வேண்டுகோள்

பவானிசாகர் அணை அமைய முக்கிய பங்காற்றிய கே.வி.கே அய்யாவை போற்றும் வகையில் பவானிசாகர் அணை பூங்கா வளாகத்தில் கே.வி.கே அய்யா அவர்களுக்கு சிலை அமைத்து மரியாதை செய்ய வேண்டும். இதற்கு நாம் அனைவரும் அரசுக்கு வேண்டுகோள் விடுக்க வேண்டும். அய்யா புகழை ஓங்க செய்வோம்...



# கெமிக்கல் இண்டஸ்ட்ரியில் மொனோபொலியாக கலக்கும் வேட்டுவ கவுண்டர்

உழைப்பையும் நேர்மையும் மூலதனமாகக் கொண்டு கெமிக்கல் இண்டஸ்ட்ரியில் மொனோபொலியாக சென்னையில் தமிழ்நாடு கெமிக்கல் இண்டஸ்ட்ரிஸ் மற்றும் திவாகர் கெமிக்கல் வொர்க்ஸ் கம்பனிகளை நிர்வகித்து வரும் திரு.A. மணி அவர்கள் நமக்கு அளித்த பிரத்யேக பேட்டியிலிருந்து...

### உங்கள் சொந்த ஊர் ?

அப்பிச்சிமார்மடம், வடக்கு தோட்டம் எனது சொந்த ஊர். நான் 15/12/1952 இல் பிறந்தேன். என் பெற்றோர் அப்பிச்சியண்ணன் மற்றும் பாப்பம்மாள். நான் காட்டு வேட்டுவர் குலம். வீரமாத்தி அம்மன் எங்களது குலதெய்வம். எனது தாத்தா, அப்பா ஆகியோர் வீரமாத்தி

அம்மன் கோயிலுக்கு பூஜை செய்து வந்துள்ளார்கள். நான் என் குடும்பத்தில் முதல் பட்டதாரி. எனக்கு ஒரு அண்ணன் உள்ளார். அவர் ஊரில் விவசாயம் செய்து வருகிறார்.

**படிப்பு ?**

அப்பிச்சிமார் மடத்தில் 5 வது வகுப்பு வரையும், திங்களூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 11 ம் வகுப்பு வரை படித்தேன். அதன் பிறகு சிக்கய்யர் நாயக்கர் கல்லூரியில் பியுசி யும் அதே கல்லூரியில் பிஎஸ்சி வேதியியல் (1969-1972) படித்தேன்.

**வேலை ?**

கல்லூரி பட்டப்படிப்பை முடித்த பின் பல்வேறு இடங்களில் வேலை தேடிக் கொண்டிருந்தேன். கோயம்புத்தூர் பல்கலைக் கழகத்தில் விலங்கியல் துறையில் அட்டெண்டராக தற்காலிக வேலை கிடைத்தது. அங்கிருந்து நான் மெட்ராஸ் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பித்தேன். 1975 இல் டேபுலேட்டராக வேலை கிடைத்தது. சென்னைக்கு வந்த நான் சுமார் 12 மாதங்கள் மெட்ராஸ் பல்கலைக்கழகத்தில் வேலை செய்தேன்.



இறுதியாக 1976 முதல் சென்னையில் குமாரசாமி என்பவரின் ஸ்டாண்டர்ட் கெமிக்கல்ஸ் கம்பெனியில் 8 வருடங்கள் பணிபுரிந்தேன். இவர் நசியனுரை சேர்ந்தவர். சி.என்.சி கல்லூரியில் என்னுடைய சீனியர் ஆவார். 1980 இல் மேலாளராக பதவி உயர்வு பெற்று அந்த நிறுவனத்தை பெரிய அளவில் வளர்க்க முக்கிய பங்காற்றினேன்.

## சொந்த தொழில் தொடங்கியது எப்படி ?

1981 இல் எனது தாய்மாமன் மகளை திருமணம் செய்து கொண்டேன். 1983 இல் எனது முதல் மகன் பிறந்தான். மகன் பிறந்த பிறகு 8 வருடம் வேலை பார்த்த அனுபவத்தை கொண்டு சொந்தமாக நிறுவனம் தொடங்க எண்ணினேன். ஆனால் என்னிடம் போதுமான பணம் பணம் இல்லை. எனவே அப்பிச்சிமார் மடத்தில் ஒரு பிரபலமான நபரிடம் ரூ.25,000 கடன் வாங்கினேன். மே 1983 இல் தமிழ்நாடு கெமிக்கல் இண்டஸ்ட்ரிஸ் என்ற பெயரில் என் சொந்த நிறுவனத்தைத் தொடங்கி உரங்கள் மற்றும் கால்நடை, கோழி தீவனம் தயாரிப்பதற்கு தேவையான ரசாயன மூலப் பொருட்களின் விநியோகிப்பாளராக இருந்தேன்.



KSP FEEDS என்ற கேரளாவைச் சேர்ந்த கம்பெனி ஆரம்ப காலத்தில் மிகவும் உதவியது. சிறு அளவில் வியாபாரம் செய்து கொண்டிருந்த நான்

1984 ல் SBI வங்கியில் ரூ. 2,00,000/- கடன் வாங்கி சொந்த ஊரில் உற்பத்தி மையத்தை ஆரம்பித்தேன். வர்த்தகம் மற்றும் உற்பத்தி இரண்டையும் பராமரிப்பதில் மிகுந்த சிரமம் ஏற்பட்டது. ஆனாலும் எந்த பாக்கியும் இல்லாமல் தொடர்ந்து EMI செலுத்தி வந்தேன். அதனால் எனக்கு வங்கியில் இருந்து மானியம் கிடைத்தது. அது எனது தொழில் வளர்ச்சிக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

**உங்கள் தொழிலை பற்றி கூறுங்கள் ?**

ஆரம்ப காலத்தில் தயாரிப்பு மற்றும் விற்பனை செய்து வந்தேன். உற்பத்தி மற்றும் போக்குவரத்து செலவுகள் அதிகரித்த காரணத்தினால் மூன்று ஆண்டுகளுக்கு பிறகு தயாரிப்பை நிறுத்திவிட்டேன். அதற்கு மாறாக மேட்டூரில் இந்த கெமிக்கலை அதிகமான கம்பெனிகள் தயாரித்துக் கொண்டு உள்ளதால் அவர்களிடமே நான் வாங்கிக் கொள்கிறேன். இது எனது செலவினத்தை கட்டுப் படுத்தியது. தற்பொழுது டிரேடிங் மட்டும் செய்து வருகிறேன். **Manganese sulphate, Zing sulphate, Copper sulphate, Cobalt sulphate** போன்ற ரசாயன மூல பொருட்களை மேட்டூர், கேரளா மற்றும் குஜராத் போன்ற இடங்களில் இருந்து வரவழைத்து ஸ்டோர் செய்து விற்பனை செய்து வருகிறேன். இருபத்தி ஐந்து டன்னுக்கு மேல் மொத்தமாக வாங்கி 500 கிலோ கிராம் வீதம் சில்லறையாக சென்னை, கேரளா, ஆந்திரா பாண்டிச்சேரி போன்ற ஊர்களுக்கு வருடம் 2 கோடி ரூபாய்க்கும் மேல் வணிகம் செய்து வருகிறேன்.



## விற்பனை யுக்தி ?

ஆரம்பத்தில் ஆட்களை வைத்து நேரடி மார்க்கெட்டிங்கில் ஈடுபட்டிருந்தேன். எனது நேர்மை, குறைவான விலை, தரமான பொருட்கள் போன்றவற்றின் காரணமாக 500 க்கும் மேற்பட்டவர்கள் எனது வாடிக்கையாளர்களாக உள்ளார்கள். இவர்கள் தங்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு அவர்களே எனது கம்பெனியைப் பற்றி கூறி அவர்களை அழைத்து வந்து என்னிடம் கெமிக்கல் வாங்கிச் செல்ல உதவியாக உள்ளார்கள்.

## வெற்றி ரகசியம் ?

பிசினஸ் லோன் வாங்கி அதை சரியான முறையில் கட்டியதால் வங்கிகளில் நன்மதிப்பை பெற்றேன். எனக்கும் வங்கிக்கும் ஒரு நல்ல உறவை ஏற்படுத்திக் கொடுத்தது. மேலும் பிசினஸ் லோன்னில் எனக்கு மானியம் கிடைத்தது. இது எனது வளர்ச்சிக்கு மிகவும் உதவியது. என் மனைவிக்கு எங்களது மகன் திவாகர் பெயரில் ஒரு கம்பெனி ஆரம்பித்து கொடுத்துள்ளேன். இதன் மூலம் எங்களுக்கு வரிச்சலுகை கிடைக்கிறது.

## குடும்பம் ?



1975 ல் சென்னைக்கு வந்த நான் 1987 முதல் சென்னை சைதாப்பேட்டையில் வசித்து வருகிறேன். எனக்கு இரு மகன்கள். என் முதல் மகன் M. பிரவீன் குமார் BE., MBA தங்கப் பதக்கம் வென்றவர் மற்றும் IT ஆலோசகர். துரதிருஷ்டவசமாக அவர் 2011 இல் ஒரு விபத்தில் தவறி விட்டார். என் இரண்டாவது மகன் திவாகர் BE, MS. தற்பொழுது USA வில் உள்ளார். அவருக்கு ஆறு வயது மகள் மற்றும் சமீபத்தில் இரண்டாவதாக ஆண் குழந்தை பிறந்துள்ளது. இப்போது புளோரிடாவில் வசிக்கின்றனர். முன்னதாக அவர் கலிபோர்னியா, டெட்ராய்ட் போன்றவற்றில் பணிபுரிந்தார்.



## நமது இளைஞர்களுக்கு உங்கள் நிறுவனத்தில் வேலை வாய்ப்பு ?

நமது சொந்தங்களுக்கு முடிந்தவரை வேலை வாய்ப்பை அளித்து வருகிறேன். சோழசிரமணிக்கு அருகில் உள்ள பொன்னம்பாளயத்தை சேர்ந்த நம்மின இளைஞர் எனது கம்பனியில் வேலை

பார்த்துக் கொண்டே படித்து மத்திய அரசு வேலை பெற்றுள்ளார். என்னுடைய சித்தி மகனும் சில காலம் என் கம்பனியில் வேலை பார்த்தார். அவருக்கும் மாநில அரசு வேலை கிடைத்துள்ளது.

### தொழிலில் சந்தித்த பிரச்சனைகள் ?

முறைப்படி லைசென்ஸ் பெற்று வணிகம் செய்து வருகிறேன். பண பரிவர்த்தனை மட்டும் சில சமயங்களில் பிரச்சனையாக இருக்கக் கூடும். எனக்கு வெளிமாநில வாடிக்கையாளர்களிடமிருந்து சில லட்சம் பாக்கி உள்ளது. வேறு பிரச்சனைகள் இல்லை.

### புதிதாக தொழில் தொடங்க உள்ளவர்களுக்கு உங்களுடைய அறிவுரை ?

தொழிலை நன்கு கற்ற பின் நிறுவனத்தை தொடங்கினேன். எனவே என்னால் தொழிலை வெற்றிகரமாக நடத்த முடிந்தது. இளைஞர்கள் யாராவது தொழில் தொடங்க விரும்பினால், முதலில் நல்ல அனுபவத்தைப் பெற்ற பின் தொழிலை தொடங்க வேண்டும். மேலும் வாடிக்கையாளர் மனநிறைவு, நேர்மை, தரமான பொருள், குறைவான விலை, போன்றவற்றை தாரக மந்திரமாக கடை பிடித்தால் வெற்றி நிச்சயம். கெமிக்கல் தொழிலில் ஈடுபட நினைக்கும் நம்மின இளைஞர்கள் என்னை தொடர்பு கொண்டால் உதவ தயாராக உள்ளேன்.



# புதிதாக வணிகம் செய்ய உள்ளவர்களின் கவனத்திற்கு



ஒவ்வொரு மனிதனும் தான் மகிழ்ச்சியாகவும் அனைவரும் போற்றும் வகையிலும் வாழ வேண்டும் என்று எண்ணுவது இயற்கை. இந்த எண்ணத்தை எத்தனை பேர் நனவாக்கினார்கள் என்றால் மிக குறைவானவர்களே. அதற்கு காரணம் தனது எதிர்காலத்தில் நாம் என்னவாக வேண்டும் என்ற தெளிவு இல்லாமல் இருப்பதே இதற்கு காரணம். தனது எதிர் காலத்தில் சிறந்த வேலைக்கு செல்வதா, வணிகம் செய்வதாக, விவசாயம் செய்வதா என்ற எந்த எண்ணமும் இல்லாமல் காலநிலைக்கு ஏற்ப வாழ்ந்து வருகிறார்கள். மேலும் பொருளாதார கல்வியும் மிக குறைவானவர்களே கற்று அதற்கு ஏற்றாற் போல் வாழ்கிறார்கள்.

இளைஞர்கள் தங்களின் எதிர்காலக் கனவை நனவாக்கும் வகையில் இளமையிலேயே திட்டமிட்டு அதற்கேற்ப செயல்பட்டால் நம் கனவுகள் 100% நனவாக மாறும், வணிகம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் இருக்கும் நமது இளைஞர்களுக்கு இக்கட்டுரை உதவும்.

நம்மில் சிலர் தொழில் தொடங்கினால் உடனே நாம் அம்பானி போல் பணக்காரனாகி விடலாம் என்று ஒரு சிலரும், தொழில் தொடங்கினால் நம் மொத்த சொத்தையும் அழித்து விடுவோம் என்ற எண்ணத்துடன் ஒரு சிலரும் உள்ளனர். எனவே புதிதாக தொழில் தொடங்கி சிலர் நஷ்டத்தை அடைகின்றார்கள் அல்லது தொழில் தொடங்காமல் இருக்கிறார்கள்.

முறையாக திட்டமிட்டு தான் என்ன தொழில் செய்ய உள்ளோம்; அதற்கு முதலீடு எவ்வளவு; சந்தை வாய்ப்பு என்ன; பொருளாதார அறிவு போன்றவற்றை தெரிந்து கொண்டு தொழில் செய்தால் தொழிலில் வெற்றி அடைவது உறுதி.





உதாரணத்திற்கு திருபாய் அம்பானி ஒரு நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த பள்ளி ஆசிரியரின் மகன். தனது 16 வது வயதில் ஏமனுக்கு சென்று அங்கு 300 ரூபாய் சம்பாத்தியத்தில் ஏ பேஷி அண்ட் கோ நிறுவனத்தில் 10 ஆண்டுகள் வேலை செய்தார். அதன்பின் தன் உறவினருடன் சேர்ந்து மஜின் என்ற நிறுவனத்தை தொடங்கினார். இந்நிறுவனத்தின் மூலம் பாலியஸ்டர் நூல் இறக்குமதியும் மிளகாய்தூள் ஏற்றுமதியும் செய்தார். இவரின் முதல் அலுவலகம் மஸ்ஜித் பந்தரில் உள்ள நரசினதா தெருவில் அமைக்கப்பட்டது. இந்த அலுவலகம் ஒரு தொலைபேசி, ஒரு மேஜை மற்றும் மூன்று நாற்காலிகள் மட்டுமே கொண்ட 350 சதுர அடி அறை ஆகும். ரூ.15,000 முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாறு அவர் ஆரம்பிக்கும் பொழுது தான் இந்தியாவில் முதல் பணக்காரன் ஆவேன் என்று நினைத்திருக்க மாட்டார். ஆனால் அவரின் சரியான திட்டமிடல், விடாமுயற்சி, மற்றும் பொதுமக்களிடம் தனது நிறுவனத்தை பற்றி ஒப்பற்ற நம்பிக்கை ஏற்படுத்துவதன் மூலம் தனது தொழிலின் வளர்ச்சியை பல மடங்கு ஏற்படுத்திக் கொண்டார். இவ்வாறு அம்பானி தன்னை இந்தியாவின் முதல் பணக்காரர் என்று சொல்லிக்கொள்ள கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகள் ஆனது.



நம் வணிகத்தை திட்டமிட்டு உறுதியுடன் செயல்பட்டால் நாமும் ஒரு சிறந்த நிறுவனத்தை உருவாக்கி மிகச் சிறந்த வளர்ச்சியை அடைய முடியும். அதற்கு நாம் செய்ய வேண்டிய 10 முக்கிய செயல்கள் :

1. உங்களுக்கு தொழில் தொடங்கலாம் என்ற எண்ணம் வந்தவுடன் உங்கள் ஐடியாவை செம்மைபடுத்துங்கள். நீங்கள் செய்ய உள்ள தொழிலை முழுமையாக அறிந்து கொள்ளுங்கள். அத்தொழிலில் தற்போது முன்னணியில் உள்ள நிறுவனங்கள், போட்டியாளர்கள் போன்றவற்றை கண்டறியுங்கள். அந்தத் தொழிலைப் பற்றி உங்களுக்கு உள்ள அறிவை மேம்படுத்துங்கள். முடிந்தால் அந்த தொழிலில் உள்ளவர்களிடம் நீங்கள் உதவியாளராக சேரந்தோ அல்லது அவரிடம் பயிற்சி எடுத்துக்கொண்டோ தொழிலை கற்றுக்கொள்ளுங்கள். உங்கள் நிறுவனத்தின் பெயரை தேர்வு செய்து அதை திரும்பத் திரும்பச் சொல்லிப் பாருங்கள். உங்கள் வாடிக்கையாளர் யார் என்பதை உறுதி செய்யுங்கள். இது போன்ற ஆரம்ப காலகட்ட ஆய்வுகளை செய்து உங்கள் யோசனைகளை முழுமையடைய செய்யுங்கள்.

2. உங்கள் வணிக திட்டத்தை எதிர்கொள்ள உங்கள் வணிக யோசனை கிடைத்தவுடன் சில கேள்விகளை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள். உங்கள் வணிகத்தின் நோக்கம் என்ன? நீங்கள் யாருக்கு அந்த பொருளை விற்க உள்ளீர்கள்? உங்கள் இலக்கு என்ன? நீங்கள் தொழில் தொடங்க எவ்வளவு நிதி ஆதாரம் தேவைப்படுகிறது? இந்த நான்கு கேள்விக்கும் நீங்கள் சரியான பதிலை கொடுக்க வேண்டும். அதற்க்கு சரியான பதிலை கொடுக்க தவறும் பொழுது நிறைய தவறுகள் நடக்க வாய்ப்புள்ளது. மேலும் மார்க்கெட் சர்வே போன்றவற்றை செய்ய வேண்டும். மேலும் எதிர்காலத்தில் வணிகத்தில் நெருக்கடி வந்தால் அதை எவ்வாறு சமாளிப்பது போன்றவற்றை கற்று உணர வேண்டும்.

3. உங்கள் வணிகத்தின் நிதி மதிப்பீட்டை அறிந்து கொள்ளுங்கள். எந்த ஒரு தொழில் தொடங்கினாலும் அதற்கான நிதியை தயார் செய்ய வேண்டும். உங்கள் சேமிப்பு அல்லது வங்கி கடன் போன்றவற்றை தெளிவாக கணக்கிட்டு அதற்கு தகுந்தாற்போல் வணிகம் செய்ய வேண்டும்.



4. சில சமயம் நிதி நெருக்கடி வந்தால் அதை எவ்வாறு சமாளிப்பது என்று முன்னரே திட்டமிடல் வேண்டும். வங்கிகளுடன் நல்ல உறவு வைத்திருக்க வேண்டும். நிலையான செலவு, நிலையற்ற செலவு, சராசரி விலை போன்ற பிரேக் ஈவன் பாயிண்ட் போன்றவற்றை தெரிந்து கொள்ள வேண்டும்.

5. சார்டிபிகேட், லைசென்ஸ் போன்ற அந்த தொழிலுக்கு தேவையானதை பெற்றுக் கொள்ள வேண்டும்.

6. காப்பீட்டு பாலிசி நமது நிறுவனத்திற்கு எடுக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

7. நமது தொழிலுக்கு சரியான தகுதியான தொழிலாளர்களை தேர்ந்தெடுப்பதே ஒரு வணிகத்தின் வெற்றிக்கு முக்கிய காரணம்.

8. ஒரு நிறுவனம் சிறப்பாக செயல்பட வேண்டும் என்றால் அதற்கு சரியான மார்க்கெட்டிங் டீம் தேவை. அதைப் பற்றியும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.






9. உங்கள் கம்பெனியின் பிராண்ட்டை விளம்பரம் செய்து உங்கள் வணிகத்தை பெருக்கிக் கொள்ளலாம்.

10. உங்கள் வியாபாரத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும். அதற்கு வாடிக்கையாளர்கள் மகிழ்ச்சியாக உள்ளார்களா, அவர்கள் உங்கள் நிறுவனத்தை நோக்கி மீண்டும் மீண்டும் வருகிறார்களா என்பதை தெரிந்து கொண்டு வாடிக்கையாளர்களுடன் நல்ல உறவை மேம்படுத்த வேண்டும்.

இவைகளே புதியதாக வணிகம் தொடங்குபவர்கள் வெற்றியடைய முக்கிய காரணிகளாகும்.

**கட்டுரையாளர்**



**Dr. D. Valai Parameswaran, MD,**
PGCIH,FICM,PGDEM,DFID,PGDIP.Endo(UK)
Six Sigma & Green Belt Certificate Holder

# திபாவளி பரிசு போட்டி

வேட்டுவக் கவுண்டர் வணிகர்களிடம் அதிக முறை வணிகம் செய்பவர்களுக்கு VG BUSINESS TYCOONS வேட்டுவக்கவுண்டர் வணிக மேம்பாட்டு அமைப்பின் சார்பில் விருதுகள் மற்றும் பரிசு வழங்கப்படும்.

**போட்டிக் காலம்**

செப்டம்பர் 25 முதல் அக்டோபர் 25 வரை

**போட்டியில் கலந்து கொள்ள தகுதி**

1.வேட்டுவக் கவுண்டர் வணிகர்களிடம் அதிக முறை வணிகம் செய்ய வேண்டும்.

2.குறைந்தது 100 ரூபாய் வணிகம் செய்ய வேண்டும்.

3.குறைந்தது 2 வேட்டுவக் கவுண்டர் வணிகர்களிடம் வணிகம் செய்ய வேண்டும்.

நவம்பர் மாத வேட்டுவர் வணிக மாத இதழ் மற்றும் வேட்டுவர் டிவி யில் பரிசு பெற்றவர் விபரம் வெளியிடப்படும்.வேட்டுவ கவுண்டர்கள் வணிகர்களிடம் வணிகம் செய்து அவர்களின் தீபாவளியை மகிழ்ச்சியாக மாற்றுவோம்.தரமான பொருளையும் குறைவான விலையில் நமக்கு வணிகர்கள் கொடுத்து நம்மை பெருமை படுத்துவார்கள்.

அன்பால் இணைவோம்... வணிகம் செய்வோம்... மேம்படுவோம்...

நமது குழுவில் நடைபெறும் வணிக விபரங்களை

வணிகம் செய்வபர் : ------------------------------------

வணிகம் பெறுபவர் : ---------------------------------------

வணிக மதிப்பு ரூ. : -----------------------------------------

போன்ற விபரங்களை VG BUSINESS HELP LINE நம்பரில் பதிவிடுங்கள்.

விற்பனை / சேவை - குறித்த நல்ல பின்னூட்டம் (Feed back) இடுங்கள். இந்த தகவலை மற்ற குழுவிற்கும் பகிர்ந்து நமது வணிகர்களுக்கு ஆதரவு தருவோம்.

VG BUSINESS HELP LINE : +919003795243



அடுத்த இதழில்...

**தீபாவளி ஸ்பெஷல்**







பிளாஸ்டிக் மாசுபாட்டை
தடுத்து நிறுத்துவோம்.
வேட்டுவர்
டிவி
STOP PLASTIC
POLLUTION